ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கி. ராஜநாராயணனின் கதவு தந்த கனவு

வே. எவரெஸ்ட் மேரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 21113064022001
தமிழாய்வு மையம்
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர். கன்னியாகுமரி மாவட்டம், 629802
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி

முனைவர் சி. கணேஷ்
நெறியாளர் & உதவிப் பேராசிரியர்
தமிழாய்வு மையம்
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர். கன்னியாகுமரி மாவட்டம், 629802
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி

ஆய்வுச் சுருக்கம்

கி. ராஜநாராயணன் படைப்பில் சிறப்பு அம்சம் கொண்டது சிறுகதை. சிறுகதைகளில் சமூக அக்கரையை இணைத்து வறுமைக்கு உருவம் தந்து படைக்கப்பட்டதுதான் கதவு என்ற சிறுகதை. மனித சமூகத்தின் ஏழ்மையின் சுயரூபம் உச்சத்தை அடையும் நிலையினை மிகச்சிறப்பாக காட்டப்பட்டுள்ளது கதவு என்றும் கதை. இதன்மூலம் சமூக சூழலையும் ஆதிக்க வர்க்கத்தின் கொடூரத்தையும் பாதிப்பின் உச்சக்கட்ட சூழலையும் சமூக சூழலோடு இணைத்து ஆய்வு செய்கிறது இவ்வாய்வு. காரணங்களை கரைதேடி கண்டெடுப்பதைவிட மனிதம் வேகப்பட்டு மடிவதை சுட்டிக்காட்டி வறுமையின் வெறுமையை விளக்கிக்காட்டி வறுமை ஒழிந்து மனித வயிறு நிரம்ப ஏய்த்துப் பிளைக்கும் வர்கத்தை தட்டிக்கேட்க முயற்சிக்கும் களத்தில் பயணிக்கிறது இவ்வாய்வு. தனி ஒருவருக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அளித்திடுவோம் என்ற கவிஞருக்கு தோள் தட்டி கரம் நீட்டும் கருத்தாழமிக்க சிந்தனைகளில் வறுமையை விரட்டியடிக்க என்னென்ன வழிமுறைகளை முன்னெடுக்கலாம் என்ற நோக்கில் ஆராய்கிறது இக்கட்டுரை.

முன்னுரை

சமூகம் எனும் சரித்திரம் பலவிதமான சக்திகளைக் உண்டாக்கியது. மனிதனை அச்சுறுத்தும் தீமைகளில் ஒன்றுதான் வறுமை. வறுமையின் காரணமாய்ப் பலக் காரணிகளைக் கொள்ளலாம். வேலையின்மை, இயற்கை தந்த ஏமாற்றம், நோய் என பலக்காரணிகள் வறுமைக்கு உருவம் தருகிறது. கதவு என்னும் கதையின் கருவினை வறுமையின் உச்சக் கட்டமாக காட்டுகிறார் கி. ராஜநாராயணன் அவர்கள். உணவு, உடை, உறைவிடம், சுத்தமான குடிநீர், கல்வி வாய்ப்பு இவைகள் கிடைக்கப்பெற முடியா வாழ்வே வறுமை என்றாகிறது. வறுமையின் அகோரத்தையும், அதன் சீற்றத்தையும், இதனால் மனிதம் மடிவதையும் கனவு என்ற கதையின்மூலம் எடுத்துக்காட்டி, அதன் விளைவுகளைத் தடுக்கும் நோக்கில் ஆராய்கிறது இக்கட்டுரை. உயிர் காக்கும் கதவு கூட வறுமைக்கு விதிவிலக்கில்லை. வியர்வையின் முத்துக்களிலிருந்து புறப்படும் ஒளி மனித வாழ்வில் வெளிச்சத்தைக் காட்டுவதற்கு காத்திருக்கும். ஆனால் தீமைகளில் சிக்குண்ட வாழ்வை கண்ணீர் துளிகள்கூட கைகொட்டி சிரிக்கும் என்பதுதான் எதார்த்த சூழல். பேனாக்களின் சீற்றங்களை சிறகாக்கிய முன்னோர்களின் உணர்வுகளுக்கு உரம் போட்டிட முயற்சிக்கும் இவ்வாய்வு இனி ஒருவர்கூட இக்கொடுமையை சந்தித்திரக்கூடாது என்பதை கருதுகோளாகக் கொண்டு வறுமையை ஓரங்கட்டும் வெளிப்பாடாக என்ன செய்யலாம் என்பதையும், பொருளாதார நோக்கில் குடும்ப வாழ்வில் பெண்களின் வலியை விவரித்து, இச்சமூகம் எத்தகைய சூழலில் தத்தளிக்கிறது என்பதையும் ஆராய்கிறது இக்கட்டுரை. மேற்கண்ட கருத்துக்களை இலக்கியத் துறையில் நீங்கா இடம் பெற்ற கி.ராவின்

*கதவு என்ற கதை ஏற்படுத்திய தாக்கத்தை கி.ராவின் கதவு தந்த கனவு என்ற தலைப்பில் ஆய்வு செய்கிறது இக்கட்டுரை.*

*கி. ராவின் கதவு என்னும் கதை சுருக்கமாக*

*பசியைப் போக்க வட்டிக்கு கடன் வாங்கி அதை அடைக்க முடியாமல் வெளியூரில் வேலைக்குச் சென்ற தந்தை ஐந்து மாதமாகியும் எந்த வித தகவலும் இல்லை. ஒரு கைக்குழந்தையோடு 3 குழந்தைகளைப் பட்டினிப் போடக்கூடாது என்பதற்காக காட்டுக்கு வேலைக்கு செல்லும் தாய். ஆசையாய் பக்கத்து வீட்டு குழந்தைகளோடு தன் வீட்டுக்கதவில் டிக்கெட் எடுத்து பேருந்து பயணம் செய்வதாக விளையாடி மகிழும் குழந்தைகள். ஏற்கனவே ஊர் தலையாரியிடமிருந்து வாங்கப்பட்ட பணத்திற்கு வட்டியோ அசலோ கட்டாததால் தலையாரி தன் ஆட்களுடன் வந்து வீட்டின் கதைவைப் பிடுங்கிச் செல்கிறார். ஏற்கனவே வீட்டில் காச்சலால் படுத்திருந்த குழந்தைக்கு காச்சல் அதிகமாகியது. வெளிக்காற்றினை தடுக்க இருந்த ஒரே கதவும் பறிபோன நிலையில் வாடைக்காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் காச்சலால் படுத்திருந்த குழந்தையின் உயிர் பிரிகிறது. சமைத்த உணவைக்கூட உண்ண முடியாமல் கதவு என்ற கோட்டை இல்லாததால் நாய்களின் வருகை அதிகமாகி சமைத்து வைக்கப்பட்ட கஞ்சியும் நாய் உருட்டிப்போட இருந்த உணவும் பறிபோனது. காட்டிலிருந்து திரும்பி வந்த தாய் இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு இறந்து கிடந்த குழந்தையின் உடலை மடியில் தாங்கி உணவின்றி பசியோடு இருந்த குழந்தைகளை வாரி அணைத்துக் கொண்டிருப்பதாக சித்தரிக்கப்படுகிறது இக்கதை. வேதனையின் அளவை நிறுத்துப்பார்க்க முடியவில்லை. கற்பனைகூட கசக்கிறது. இவற்றை எல்லாம் தாங்க முடியாமல் தாய் படும் வேதனையை விவரிக்க வார்த்தைகளில்லை. இத்தகைய கதையில் பயணிக்கிறது "கதவு"[1] என்னும் கதை. இனி ஒருவர் கூட உணவின்றி இருந்திரக்கூடாது என்பது கி. ராவின் உள்ளம் கேட்டும் வேண்டுதல்.*

*யார் காரணம்?*

*மனிதர்களா? இயற்கையா? வட்டி வாங்கி உண்டு பிளைக்கும் பணக்காரர்களா? வேலையின்மையா? வேலைக்கேற்ற கூலியின்மையா? அறியாமையா? அறியாத காரணிகளா? நிலம் இருந்தாலும் விளைச்சலைப் பெருக்க வழி தேடுவதில்லையே! காரணம் வானம் கூட நம்பிக்கைக்கு பாத்திரவானாய் இல்லாதுதான். தோன்றிய மேகம் கூட பொய்யாப் போவது மனிதன் செய்த செயலால் என்பதை மறுக்க முடியாது. இயற்கை மனிதனுக்கு பச்சைக் கொடி காட்ட மூன்று காரியங்களை மேற்கொள்ளவேண்டும்.*

1. *நிலத்தடி நீரை மேம்படுத்துவது*
2. *நீர் நிலைகளை பராமரிப்பது*
3. *மரங்களை நட்டு இயற்கையை பேணுவது.*

*பெய்கின்ற மழையில் நிலத்தடிக்கு செல்லும் தண்ணீர் அளவு குறைந்து வருகிறது. காரணம் நிலங்கள் காங்கிரீட்டால் சூழப்பட்டுள்ளது. இந்நிலை மாறவேண்டும்.*

*ஐ.நா பொதுச்சபையின் "தண்ணீர் அடிப்படை உரிமை" எனும் தீர்மானத்திற்கு ஆதரவாக 2010 -இல் இந்தியா வாக்களித்துள்ளது. அதன்படி கண்ணியமான மனிதவாழ்வுக்கு நீரின் மீதான மனித உரிமை தவிர்க்க முடியாது. தண்ணீர் மற்ற மனித உரிமைகளை விட முதன்மையானது என்பதை இந்தியா ஒத்துக் கொள்கிறது. அப்படியானால் தண்ணீரை வணிகப்பொருளாக தனியார் முதலாளிகளுக்கு தாரை வார்க்கும் போக்குகள் நிறுத்தப்படவேண்டும். ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சும் கார்ப்பரேட் சூழ்ச்சிகள் தீவிரமாய் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்கிறார் யோக்கியர்கள் கவனத்திற்கு என்ற நூலின் ஆசிரியர் ம. டைட்டஸ் மேகன்.[2]*

*மழை நீரை தேக்கி வைக்க ஏரி, குளம், குட்டைகள், சீரமைக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட வேண்டும். இதை செய்ய தவறிய அரசை நினைத்து நாம் வெட்கப்பட வேண்டும். நீரை தேக்கி வைக்க போதிய வாய்ப்பு இல்லாததால் கடலோடு கலக்கிறது மழைநீர். இந்நிலை மாறி வருங்காலம் செழிமையுற நீரை தேக்கி வைக்கவேண்டும்.*

*வளர்ச்சி என நினைத்து பலவருடங்கள் வளர்த்த மரத்தை ஒரே நொடியில் வீழ்த்தி விடுகிறோம். இது மழைபெய்ய நாமே தடுப்பது போன்றதாகிறது. மலைகளை அழிப்பதும், மரங்களை வெட்டுவதும் நம் தலைமுறையை நாமே அழிப்பதற்கு சமமாகிறது.*

கடன் பெறுதல்

ஏழ்மையின் கோரப்பிடியில் சிக்கி தவிக்கும் குடும்பத்தின் நிலையை சித்தரிக்கும் கி.ரா வட்டிக்கு பணம் பெறும் நிலையை ஆழமாக விவரிக்கிறார். பெண்களின் திருமணத்திற்கு சீதனம் கொடுக்க வட்டிக்கு பணம் பெறுவோர் உண்டு. மேல்படிப்புக்காக வட்டிக்கு பணம் பெறுவோரும் உண்டு. வேலையில் அமர பணம் மட்டும் தானே உதவிசெய்கிறது. இதற்காக வட்டிக்கு பணம் பெறுவோரும் உண்டு. நோய்கள் வாட்டுகையில் அதிலிருந்து விடுபட வேறொரு நோயில் அகப்படுவோரும் அதாவது வட்டிக்கு பணம் பெறுவோரும் உண்டு. அல்லது சொத்துக்கள் வாங்க வட்டிக்கு பணம் பெறுவோரும் உண்டு. தொழில் விருத்தியடையச் செய்ய மற்றும் வீடு கட்ட வட்டிக்கு பணம் பெறுவொரும் உண்டு. மகிழ்ச்சி என்பதை என்னவென்று உணராமல் அதைத் தேடி அலையவும், ஏன் உண்பதற்காகவே வட்டிக்கு வட்டி கட்டி பணம் பெறுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறார் கி.ரா.

வட்டி கட்ட முடியாததால் இழப்புக்கு பஞ்சமில்லை. வட்டிக்கு ஈடாக வீட்டின் ஒரே கதவு பிடுங்கப்படுகிறது. அந்தி வாடைக்காற்று வீட்டிற்குள் நேராக அடிக்க படுத்திருந்த குழந்தை ஒன்று அதிகக் காச்சலுக்கு உள்ளாகி, இறந்துவிடுகிறது.

என்னடா கொடுமை இது. வெறும் கதையாக இதை பார்க்க முடியவில்லை. காரணம், இன்றைய உண்மை நிலை இதுதான். வட்டிக்கு வட்டி குட்டிபோட்டு மனிதனை வாட்டி வதைக்கும் நிலை என்று மாறும்? பாமர மக்கள் தமிழ்நாட்டின் பட்ஜெட், இந்தியாவின் பட்ஜட் என்று பேசுகிறோமேத்தவிர வேலையின்றி உணவின்றி உறைவிடமின்றி தவிக்கும் கிராமத்து நிலையை யாரேனும் பேசமுடிகிறாதா?

வறுமையின் வடிவம்

உணவின்மை மட்டும் வறுமையல்ல. கல்வியின்மை, உடை உறைவிடமின்மை, வேலையின்மை சுகாதாரமின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, உரிய வருமானமின்மை போதிய சத்துணவின்மை கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலை என வறுமைக்கு பல பரிணாமங்கள் உள்ளன.[3] கந்து வட்டிக்கு பணம் பெற்று வாழ்வையே மாய்த்துக் கொண்ட நிகழ்வுகள் இன்று அரங்கேறிக் கொண்டிருக்கிறது. ஏழைகளின் உழைப்பை உறிஞ்சும் கந்துவட்டி ஏழைகளை பாடாப்படுத்தும் நிலை இன்றும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. கந்துவட்டி மீட்டர் வட்டி கும்பல் ஏழை மக்களிடம் வட்டிக்கு பணம் கொடுத்து அவர்களிடமிருந்து வெற்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கி வாழ்வையே இல்லாமலாக்கும் நிலை ஆங்காங்கே நடந்து கொண்டிருக்கிறது.

ஏழைகள் நிலை

வட்டி மட்டுமே கட்டி வாங்கின அசலுக்கு மேலான வட்டியைக் கட்டி மீதம் பணத்திற்கு இருக்கும் சொத்து வீடு உடைமைகள் என அத்தனையும் இழந்த நிலையிலும் விட்டுவிடுவார்களோ? இல்லை. அடியாட்கள், குண்டர்களை வைத்து மிரட்டுவதும், தாக்குவதும், அவமானப்படுத்துவதும், வீட்டுப்பெண்களைத் தரக்குறைவாக நடத்துவதும், நடந்துகொண்டுதான் இருக்கிறது. தான் வாங்கிய பணத்தை பல மடங்கு கட்ட வேண்டியது சாதாரணமாகிவிட்டது. வட்டிக்கு பணம் பெறுவதும் இரத்தம் உறிஞ்சப்படுவதும் வாடிக்கையாகி விட்டது. எப்படியாவது துன்பம் தீர வேண்டும் என்று வாங்கப்படும் பணத்தால் தீராத்துன்பத்தில் வீழ்வது வாழ்வின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. தற்போது சொத்துக்களை பறிக்கும் நோக்குடன் வீட்டிற்கு பணம் தருவதும் வட்டிக்கு வட்டிபோட்டு இருக்கும் மீதமுள்ள சொத்துக்களை பறிக்கும் பழக்கம் இன்று சகஜமாகிவிட்டது.

கி.ராவின் உள்ளாந்த கோபம் புரிகிறது. ஆசிரியரின் பேனா மட்டும் பேசவில்லை. உள்ளக் குமுறலும் வெளிப்படுகிறது. என்று தணியும் இந்த வறுமையென்ற வேதனை? இல்லாமையை இல்லாமலாக்குவது என்று சொல்லி இயலாமையை பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஆதிக்கச் சக்திகளுக்கு உரம் போடும் அரசும், ஆட்சியும் இல்லாமலாக்க வேண்டும்.

கதவு வீட்டின் பாதுகாப்பு என்றால் பாமர மக்களின் பாதுகாப்பு மனிதாபிமானமே. விலங்குகளுக்கு எங்கே புரியப்போகிறது? வேலியே பயிரை மேய்வது போலல்லவா ஏழைகளை உறிஞ்சி பிழைக்கிறார்கள். உறியப்படுவது உணர்வுகளையும் சேர்த்து என்பதுதான் இங்கு வேதனைக்குரியதாகிறது. "உள்ளவனுக்கு கொடுக்கப்படும், அவர் நிறைவாகப் பெறுவார்.

மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்'' என்கிறது விவிலியம்.[4] அதுபோல சமைத்த உணவையும் பறிகொடுத்து நிற்கும் குழந்தைகளை சித்தரிக்கிறார் ஆசிரியர்.

பசி, ஏமாற்றம், வலி இவைகள் அனுபவித்தவர்களுக்குத்தான் அதன் ஆழம் தெரியும். இல்லாமையின் வெளிப்பாட்டை விவரிக்க வார்த்தையில்லை. இன்றைய சூழலில் இருந்தும் இல்லாமலும் வாழும் நடுத்தர வர்க்கத்திற்கு குறையே இல்லை. உலகில் 60 சதவிகிதம் மக்கள் இந்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தாம். குறிப்பாக இத்தலைமுறையினர் போதும் போதும் என்றளவிற்கு வாட்டி வதைத்த கொரோனாவுக்குப் பின் மீண்டு எழமுடியாமல் தவிக்கும் பணக்கார பிச்சைக்காரர்கள் படும் பாடு வேதனைக்குரியது. வெளியில் சொன்னால் வெட்கக்கேடு. சொல்லாமல் விட்டால் மனதிற்கு கேடு. இருதலைக்கொள்ளி போலத் தவிக்கும் மானுடத்திற்கு கரம்கோர்த்து ஏணிப்படியாகிட முன்வருமா இன்றைய அதிகார வர்க்கம். கண்கள் முழுக்க கனவுகளுடன் மனம் முழுக்க மாண்பினை நோக்கி ஏக்கத்துடன் காத்துக்கொண்டிருக்கும் மனிதர்களே உங்களை நீங்களே தேற்றிக்கொண்டு வீறிட்டு எழுவதுதான் சிறந்தது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

வெளியூர் வேலைக்கு சென்ற கணவன் திரும்பாத நிலை, அயல் நாடுகளில் வேலைக்குச் செல்பவர் ஏமாற்றப்பட்டு மனமுடைந்து மீண்டும் சொந்த ஊரில் தலைகாட்ட முடியாத நிலை, சூழ்நிலையின் காரணமாகவோ தனிப்பட்ட இயலாமையின் காரணமாகவோ தனக்கென்று புதிய வாழ்வை தேடிச்சென்று தன் மனைவி குழந்தைகளை நினையாமல் கைவிட்டுச்செல்லக்கூடிய நிலை போன்ற பெண்களின் அவலம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்கிறது. வறுமை என்ற கோரப்பிடியில் சிக்கி பெற்றக் குழந்தையை பறிகொடுத்து நிற்கும் தாயின் மனநிலையை விவரிக்கத் வார்த்தையில்லை. அதோடு பசியின் கொடுமையால் கண்களில் ஒளி இழந்து, கலையிழந்த சிரத்துடன் தாயைப் பார்த்து ஏங்கிநிற்கும் குழந்தையைக்காண எந்தத்தாய்தான் விரும்புவாள். இவைகளைத் தாங்கும் இதயத்தை இறைவன் தெரிந்துதான் பெண்ணிற்கு கொடுத்திருக்கிறார். ''பொறுமைப் பொருளாகிய பெண்ணைக் கிறிஸ்து என்றும், காந்தி என்றும் யான் போற்றுகிறேன்'' என்கிறார் திரு.வி. கல்லியாண சுந்தரனார்.[5]

தியாகத்தின் உருவே அம்மா

தாயானவள் எப்போதும் தனக்கென ஒன்றும் கொள்வதில்லை. பிள்ளைகளை வஞ்சிக்கும் தாய் உலகில் இருப்பாளோ? தன்னுயிர்க்கென ஒன்றிருந்தால் அதை பிள்ளைகளுக்கு கொடுக்க தாய் சிறிதும் யோசிப்பதில்லை. பிள்ளைகளுக்காய் தாய் செய்யும் தியாகத்தை இன்னதென்று சித்தரிக்க முடியாது. சுருங்கச் சொன்னால் பெண் தனக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழ்பவள் என்றே சொல்லலாம். புனித அன்னையின் வடிவமான பெண்கள் முன்னேறினால் மட்டுமே ஒரு நாடு முன்னேற முடியும். நாட்டின் முன்னேற்றத்திற்கு வேறு வழியே இல்லை என்று விவேகானந்தர் கூறினார்.[6]

பெண்கள் நாட்டின் கண்கள் என்பது வெறும் பேச்சாக இருந்துவிட்டது. எட்டுத்திசைக்கும் அவமானப்படும் பெண்ணை பார்க்கிறோம். பாதுகாப்பின்மை என்பது நம்மை அச்சுறுத்துகிறது. வேளியே செல்லும் பெண் வீட்டில் வந்து சேர்வது அன்றாட போராட்டமாகிவிட்டது. குடும்பத்தில் அடைபட்டுக்கொண்டிருக்கும் பெண்படும் அவமானம், கணவனால் ஏற்படும் நெருக்கடி, பிள்ளைகளால் வரும் துன்பங்கள் இவைகளால் மொத்தத்தில் நடைபிணங்களாக திரியும் பெண்களையே பார்க்கமுடிகிறது.

கனவை நனவாக்குவோம்

கதவு என்னும் கதைமூலம் கி.ராவின் மனம் என்ன கேட்கிறது என்று பார்த்தால் வறுமையை இதைவிட சித்தரிக்க முடியுமா என்று தோன்றுகிறது. வறுமை அதாவது இல்லாமை என்னும் நிலை மாற என்ன செய்யலாம் என்பதை சிந்தித்து சீர்தூக்கி பார்க்கவேண்டிய கட்டாயமும் கடமையையும் நமக்கு இருக்கிறது. தமிழன் என்று சொல்வதில் பெருமை கொள்ளும் நமக்கு தலைவன் என்பதில் மோகம் இருந்துவிடக் கூடாது. தன்மானம் மிக்கவன் என்று பெருமைகொள்ளும் மானிடத்துக்கு தான்தோன்றித் தனமான வாழ்க்கை வந்திரக்கூடாது. எதற்கும் அஞ்சாதவன் என்று மார்தட்டிக் கொள்ளும் மனிதனுக்கு சோம்பேறித்தனம் கொஞ்சம்கூட ஒட்டிக்கொள்ளக்கூடாது. வறுமையை ஒழித்துக்கட்ட சரிந்து கிடக்கும் சமத்துவத்தை சாரங்கட்டி நிறுத்துவோம்.

*வீழ்ந்து கிடக்கும் மனித நேயத்தை விண்ணிற்கு எட்டும் மட்டும் தூக்கி நிறுத்துவோம். பங்கிட்டுக் கிடக்கும் பாரம்பரிய விருந்தோம்பலை புதுமையாய் புதுப்பிப்போம். பகிர்ந்து வாழும் சமுதாயத்தை உருவாக்க குழந்தைகளை உருவாக்குவோம். தொலைத்தொடர்பு சாதனங்களில் தொலைந்து போன இளைய சமுதாயம் தொலைத்த மிச்சங்களையாவது மீட்டெடுப்போம். படிப்புக்கேற்ற வேலை என்றில்லாமல் திறமைக்கேற்ற வேலை என்பதை உறுதிப்படுத்த வேலை தேடும் இளைஞர்களை ஊக்கப்படுத்துவோம். நமது சந்ததிகள் உண்ண உணவில்லை என்ற உண்மையை உணரச்செய்து விவசாயம் உருபெறச் செய்வோம்.*

*சுவாசிக்கும் காற்றுக்கே விலைகொடுக்க வேண்டிய நிலை உருவானதை தடுக்க இயற்கையை பேணும் பயிற்சியில் பயணிக்க வழிகாட்டுவோம். புதுப்புது நுண்ணுயிரிகளிலிருந்து நம்மை பாதுகாக்கும் புத்துணர்ச்சியை வரவேற்போம். சிறுகச்சிறுக சேர்க்கும் பழக்கத்தை சிறப்பாய் நம் குழந்தைகளுக்கு சொல்லித்தருவோம். உறவுகளின் உறைவிடமாம் உன்னதப் பெற்றோரை உதறித்தள்ளாது உண்மையான அன்போடு பராமரிக்கும் நல்லுள்ளங்களை உருவாக்குவோம். அறிவியல் எவ்வளவு வளர்ந்தாலும் அன்பு என்பது மாறாது என்பதை அறியச்செய்யும் கல்வியையும், கண்டுபிடிப்புகள் உலகை நிரப்பினாலும் கருணை உள்ளம் இறைவன் வாழும் இல்லம் என்ற ஆன்மீகத்தையும் நம் சந்ததிகளுக்கு கற்பிப்போம்.*

*முடிவுரை*

*மனிதனின் கண்டுபிடிப்புகளும் அறிவியலின் அபார வெற்றிகளும் புத்திக் கூர்மையின் பரவச வளர்ச்சிகளும் மனித சமுதாயத்தை தழுவினாலும் மனிதனால் கட்டுக்கு கொண்டு வர முடியாத தீய சக்திகளும் தோகை விரித்து ஆடுவதை தவிர்க்க முடியவில்லை. காரணம் தேடுவதற்குள் மடிதல்கள் பெருகிவிடுகின்றன. உண்மையை உணர்வதற்குள் உருகுலைந்து நிற்கிறது சமுதாயம். தூக்கிப் பிடிக்க சக்தியின்றி தூங்கும் நிலைதான் மனிதனால் செய்ய முடிகிறது. இந்நிலையில் வறுமை என்னும் அகோரம் முத்தமிடும் மானிடர்களை திரும்பிப் பார்ப்பதற்குள் திருப்பிப் போட்டுவிடுகிறது. பொருளாதார வளர்ச்சி நிலையை சமமாய் சாமானியனுக்கும் தந்திடும் பொறுப்புள்ள மனிதர்களாய் வாழ்வதே சவாலாகக் கொண்டு வாழடும் நிலை உருவாக வேண்டும். உணவின்றி உருகுலையும் சமுதாயத்தையும் கண்ணீரால் கரைந்திடும் குடும்பப் பெண்களையும் நிலையான அமைதியான வாழ்வினைச் சுவைக்க வழிகாட்டுவோம்;. கி. ராஜநாராயணன் அவர்கள் கதவு என்னும் கதைமூலம் வெளிச்சத்துக்கு கொண்டுவந்த வறுமையை இல்லாமலாக்க இன்று வாழும் குழந்தைகள் முதல் பெரியவர் வரை போராடவேண்டும். இதன்மூலம் அமைதியான சமுதாயம், உருவாகிடவும் நாளையத் தலைவர்கள் தூயதை சிந்தித்து செயலாற்றிட ஏதுவாக வாதுசூது இல்லாத சூழ்நிலையை உருவாக்கும் இயற்கையை போற்றிடவும், மனிதம் புனிதம் காணவும் வழிவகுப்போம்.*

*துணைநின்ற நூல்கள்*


*1. கி. ராஜநாராயணன், கதவு, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2018*

*2. ம. டைட்டஸ் மோகன், யோக்கியர்களின் கவனத்திற்கு, 2020, நம்வாழ்வு வெளியீடு, மயிலாப்பூர், சென்னை, பக் - 214*

*3. முனைவர் மு. தென்னவன், மின்னியல் கட்டுரை*

*4. திருவிவிலியம், மத்தேயு 13: 12*

*5. திரு.வி.கல்லியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, 2012, பக். 30*

*6. பேராசிரியர் ப.சு. சந்திரபாபு, பெண் வரலாறும் விடுதலைக்கான போராட்டமும், 2011, பக்.280*


********* ********* ********** ********* ********* ********** ********** **********